**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 354/2018.**
**வழக்கு சாட்சி – அ.சா. 1 (பட்டியல் சாட்சி –2)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சிவராஜ்குமார். | ஜாதி | |
| தந்தை பெயர் | கண்ணையன். | தொழில் | விவசாயம். |
| கிராமம் | தேனி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 55/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.03.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, தேனியில் குடியிருந்துகொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் எனது நண்பர் ஆவார். இவ்வழக்கின் புகார்தாரர் இறந்துவிட்டார். எங்களுக்கும், எதிரிக்கும் இடையே கடந்த 2017–ஆம் ஆண்டு ஒரு சிறு தகராறு ஏற்பட்டது. நானும், புகார்தாரரும் சென்று விசாரிக்கச் சொன்னோம். செல்லப்பாண்டி புகார் கொடுத்தார். இவ்வழக்கு நிலுவையிலிருந்துபோது, எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டோம். அந்த சமாதான மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியைப் பிறழ் சாட்சியாகப் பாவிக்ககோரி அரசுத் தரப்பில் அனுமதி கோரியதன்பேரில், சாட்சியைப் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டது:–</u>**

கடந்த 27.02.2017 ஆம் தேதியன்று, தேனி, பத்திர ஆபிஸ் அருகே, எனக்கும், எதிரிக்கும் சிறிய வாய்த் தகராறு ஏற்பட்டது என்றும், அருகிலிருந்தவர்கள் விலக்கி அனுப்பி வைத்தார்கள் என்றும்,பின்னர், நானும், செல்லப்பண்டியும் இருச்ககர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, எதிரி 4 சக்கர வாகனத்தை வைத்து வழிமறித்து, எங்களைப் பார்த்து அசிங்கமாகப் பேசி,

கை மற்றும் ஆயுதங்களால் எங்களைத் தாக்கி காயப்படுத்தினார் என்றும், செல்லும்போது, உங்களைக் கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டிவிட்டுச் சென்றார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரியுடன் நான் சமாதானம் ஆகிவிட்டபடியால் நான் அவரைக் காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்துப் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

இல்லை.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.03.07 14:40:40 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**